1995 மே 2]

பிற்பகல் 11-05

டாக்டர் வெ. சரோஜா: பேரவைத் தலைவர் அவர்களே, எக்கனாமிக் எம்ப்ளாய்மென்ட் பார் விமன் என்பதை கருத்தில் கொண்டு கிராமப்புற மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்ற உன்னத நோக்கோடு செயல்பட்டு வரும் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் அப்பகுதியில் உள்ள பெண்கள் பயனடையும் வண்ணம், அந்தப் பகுதியில் பணிபுரியும் அந்தத் தொழிலை நன்கு உணர்ந்த அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களைக் கொண்ட பனைப் பொருள் கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதன் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வருடம் அதைச் செயல்படுத்த செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் சமுதாய முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி இன்று தமிழ்ப் பெண்களின் கண்மணியாக தமிழ்நாடு பெண்களின் முதல் மணியாக (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது பர்ஸ்ட் லேடி ஆஃப் தி தமிழ்நாடு என்று சொல்லக்கூடிய அளவில் பல்வேறு சிறப்புகளைப் பெற்று தமிழகத்தில் நிலையான ஒரு நல்லாட்சியை நடத்திக் கொண்டிருக்கக் கூடிய புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில் இது போன்ற பனை ஓலைகளின் மூலம் செய்யப்படும் பல்வேறு பொருட்கள், கயிறு, தும்பு போன்றவைகள் தயாரிக்கப்படக் கூடிய தொழில்களுக்கு அதிகமான முறையிலே பெண்களைத்தான் பயன்படுத்துகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க பின்னர் எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்ட வினாக்கள் இப்போது எடுத்துக்கொள்ளப்படுகின்றன. வினா எண் 503. திரு. சி. குழந்தைவேலு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

503—

அன்னவாசல் ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

*25338—திரு. சி. குழந்தைவேலு:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், வடசேரிபட்டி மற்றும் குன்னாண்டார் கோவில் ஒன்றியம், கொங்குதிறையன்பட்டியில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கிராமத்தில் அன்னவாசல் ஒன்றியத்தில் வடசேரிப்பட்டி கிராமம் சுமார் 5,000 மக்கள் தொகை கொண்ட கிராமம் ஆகும். அதே போன்று குன்னாண்டார் கோயில், கொங்குதிறையன்பட்டி மக்கள் தொகை அதிகமாக உள்ள கிராமங்கள் ஆகும். இந்த இரண்டு கிராமங்களில் உள்ள மக்கள் காய்ச்சல் போன்ற சிறு சிறு வியாதிகளுக்குக் கூட தொலைவில் உள்ள கீரனூர் மற்றும் புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய ஒரு நிலை உள்ளது. இந்த மக்களின் நீண்ட நாள் குறையைப் போக்க ஏழை எளிய மக்களின் தெய்வமாக விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு இதை மீண்டும் பரிசீலனை செய்து வரும் ஆண்டிலாவது இங்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் 1,16,861 பேர் மக்கள் தொகை என்று கணக்கு கொடுத்து இருக்கிறார்கள். அங்கு ஏற்கனவே 3 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அதே போன்று மற்றொரு ஒன்றியத்தில் 77,000 பேர்தான் மக்கள் தொகை என்று கொடுத்திருக்கிறார்கள். அங்கே 4 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் என்ற வகையிலே இதற்கு மேலே கொடுக்க முடியாது என்று அரசிலே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் எதிர்காலத்திலே இது பரிசீலிக்கப்படும்.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களில் போதுமான மருத்துவர்கள் இல்லாத குறையைப் போக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மருத்துவர்களைப் பொறுத்தவரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திலும் இரண்டு மருத்துவர்கள் இருக்க வேண்டும். அதிலே ஒரு பெண் மருத்துவர் இருக்கவேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே குறைபாடு இருந்தால் அதைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் உடனே எடுக்கும்.